DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## SC.No.86/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | : | 6 | நாள் | : | 13 .11.2024 |
| பெயர் | : | செல்லப்பா | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 13th day of November 2024.

எதிரி ஆஜர்.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

முதல் விசாரணை

நான் வாசுதேவநல்லூரில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். அவர் எனது பேரன் முறையாகும். நாட்டாமை கணேசன் என்பவரைத் தெரியும். இரஞ்சித் தெரியும். நான் வேலைக்குச் சென்றுவிட்டு திரும்பி வந்தபோது அவர் இறந்ததாக தெரியும். இரஞ்சித் எனக்கு பேரன் முறை ஆகும். மாரிச்சாமியும் இரஞ்சித்தும நல்ல முறையில் பேசிக்கொள்வார்கள். அவர்களுக்கிடையே இருந்த பிரச்சனை பற்றி எனக்கு தெரியாது. நான் அவர்களுக்கிடையே பஞ்சாயத்து ஏதும் செய்துவைக்கவில்லை. வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.**

நான் போலீசார் விசாரணையில் 2017 ம் ஆண்டு ஒரு நாள் எதிரி மனைவி ரஞ்சித்துக்கும் தவறான உறவு இருப்பதாக கருதி எதிரி அவரது தந்தையுடன் சேர்ந்து கொண்டு ரஞ்சித் குமாரை சத்தம்போட்டார் என்றும் நானும், கணேசனும் அவர்களை சத்தம்போட்டு விலக்கிவிட்டோம் என்றும் அப்போது எதிரி ரஞ்சித்குமாரைப் பார்த்து அசிங்கமாக பேசி உன்னை கொல்லமல் விடமாட்டேன் என்று மிரட்டினார் என்று சொன்னால் சரியல்ல. அதன் தொடர்ச்சியாக 21.10.2017 ம் தேதி காலை 10.40 மணிக்கு எங்கள் ஊர் கலைஞர் காலனி பேருந்து நிறுத்தத்தில் அமர்ந்திருந்த ரஞ்சித்குமாரை எதிரி கழுத்திலும் தோள்பட்டையிலும் வெட்டி காயப்படுத்தினார் என்று போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. 23.10.2017 அன்று ரஞ்சித் இறந்துபோனார் என்றால் சரிதான். எதிரி என் பேரன் முறை என்பதால் அவரை வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

**SC.No.86/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | : | 7 | நாள் | : | 13 .11.2024 |
| பெயர் | : | கணேசன் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 13th day of November 2024.

எதிரி ஆஜர்.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது வாசுதேவநல்லூரில் குடியிருக்கிறேன். நான் கன்னியாகுமரி அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.6 செல்லப்பாவைத் தெரியும். ஆஜர் எதிரி என் அண்ணன் மகன், இறந்துபோன இரஞ்சித் என் அக்கா மகன். எங்கள் சமுதாயத்திற்கு வரி பிரிக்கும் பொறுப்பில் இருந்து வந்தேன். பக்கிரி என்பவர் என் அண்ணன். மாரிச்சாமியும் இரஞ்சித்தும நல்ல முறையில் பேசிக்கொள்வார்கள். அவர்களுக்கிடையே இருந்த பிரச்சனை பற்றி எனக்கு தெரியாது. நான் அவர்களுக்கிடையே பஞ்சாயத்து ஏதும்

செய்துவைக்கவில்லை. வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.**

நான் போலீசார் விசாரணையில் 2017 ம் ஆண்டு ஒரு நாள் எதிரி மனைவி ரஞ்சித்துக்கும் தவறான உறவு இருப்பதாக கருதி எதிரி அவரது தந்தையுடன் சேர்ந்து கொண்டு ரஞ்சித் குமாரை சத்தம்போட்டார் என்றும் நானும், செல்லப்பாவும் அவர்களை சத்தம்போட்டு விலக்கிவிட்டோம் என்றும் அப்போது எதிரி ரஞ்சித்குமாரைப் பார்த்து அசிங்கமாக பேசி உன்னை கொல்லமல் விடமாட்டேன் என்று மிரட்டினார் என்று சொன்னால் சரியல்ல. அதன் தொடர்ச்சியாக 21.10.2017 ம் தேதி காலை 10.40 மணிக்கு எங்கள் ஊர் கலைஞர் காலனி பேருந்து நிறுத்தத்தில் அமர்ந்திருந்த ரஞ்சித்குமாரை எதிரி கழுத்திலும் தோள்பட்டையிலும் வெட்டி காயப்படுத்தினார் என்று போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. 23.10.2017 அன்று ரஞ்சித் இறந்துபோனார் என்றால் சரிதான். எதிரி என் அண்ணன் மகன் முறை என்பதால் அவரை வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**